# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 12 இதழ் : 02 பிப்ரவரி 2026 தனிப்பிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 12 Issue No : 02 February 2026 Single Copy - Rs.20/- Annual Subscription Rs.200/-



# உதிரப்போக்கு பிரச்சனை நீங்கியது!
# அரசு வேலை கிடைத்தது!
# பொருளாதாரத்தில் செழிப்பு உண்டானது!

நான் அன்பரின் ஊழிய நீண்ட நாள் பங்காளர். அனைத்து கூட்டங்களிலும் தவறாமல் வந்து கலந்துக் கொள்வேன். அன்பரின் ஊழிய பத்திரிக்கை யில் வருகிற தேவ செய்திகளை ஆவலாய் படித்து வருகிறேன். ஊழியத்தை தொடர்ந்து தாங்கு கிறேன்.



எனக்கு நீண்ட நாட்களாக உதிரப் போக்கு பிரச்சனை இருந்தது. அதனால் அதிக கஷ்டத்தை அனுபவித்தேன். அந்த நேரத்தில் காரைக்குடியில் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் நான் கலந்துக்கொண்டேன். **ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னை அழைத்து தீர்க்கதரிசனமாய் என் பிரச்சனையை சொல்லி எனக்காக ஜெபித்தார்கள். அந்த நாளிலிருந்து உதிரப்போக்கு பிரச்சனை நீங்கியது.**

**குடும்பத்தில் நான் மட்டும் இரட்சிக்கப்பட்டபடியால் என் தேவைகளுக்கு கஷ்டப் பட்டேன். என் கை செலவுகளுக்கு பணம் இருக்காது. அந்த நேரத்தில் மாநகராட்சியில் எனக்கு சிறிய வேலை கிடைப்பதற்கு கர்த்தர் உதவி செய்தார். அதனால் இப்பொழுது என் தேவைகளுக்கும் அன்பரின் ஊழியத்தை தாங்குவதற்கும் எனக்கு இலகுவாக இருக்கிறது. என் மூத்த மகனுக்காக ஐயா ஜெபித்து எந்த செலவும் இல்லாமல் அரசு வேலை கிடைத்தது. சமீபத்தில் புதிய கார் வாங்குவதற்கும் கர்த்தர் உதவி செய்தார்.**

**அருகிலிருந்த ஒரு குடும்பத்தினர் எங்கள் மீது பொறாமை கொண்டு செய்வினை காரியங்களை செய்து வந்தார்கள். கர்த்தர் தாமே அதிலிருந்தும் எங்களை தப்புவித்தார். செய்வினை செய்தவர்களே அந்த எல்லையிலிருந்து போகும்படி கர்த்தர் ஒத்தாசை செய்தார். இத்தனை நன்மைகளை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். ஐயா குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.**

**- திருமதி. அன்னகுஞ்சரம், காரைக்குடி.**



# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



**DR. JANE JOSHUA**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நம் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்போஸ்தலர் 16:16-34 வரையுள்ள வசனங்களில் சிறையிலிருந்த பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார் கள் என வாசிக்கிறோம். சில நேரங்களில் இதுபோன்ற சிறையிருப்பின் சூழ்நிலைகளில் நீங்கள் இருக்கும்பொழுது சோர்ந்து போகாதீர்கள். ஜெபத்திலும் துதிப்பதிலும் நிலைத்திருக்கும் பொழுது கர்த்தர் தாமே உங்கள் சிறையிருப்பை மாற்றுவார், உங்களுடன் இருப்பவர்களின் சிறையிருப்பையும் கர்த்தர் மாற்றுவார். புதிய காரியங்களை துவங்கும்பொழுது சத்துரு பல தடைகளை கொண்டுவந்தாலும் கர்த்தர் தாமே இடைபட்டு தடைகளை நீக்கி, அதிசயங்களை காணச்செய்வார்.

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தேர்விற்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிற இந்த நாட்களில் கர்த்தர் தாமே அவர்களுக்கு ஞானத்தை தருவார். தேர்வை நன்கு எழுதுவதற்கு உதவி செய்வார்.

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். பிப்ரவரி மாதத்தில் புதுச்சேரி மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங் கள். உங்கள் பகுதியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு தவறாமல் வந்து கலந்துக் கொள்ளுங்கள். கூட்டங்களை நடத்துவதற்கு உங்களுடைய உதவி அதிக தேவையாக இருக்கிறது. ஆகவே உற்சாகமான காணிக்கையை கொடுத்து கூட்டங்களை தாங்குங்கள்.

நமது Ministry of Jesus YouTube சேனலில் வெளிவருகிற அனுதின அற்புதம், சிறப்பு செய்திகள் மற்றும் நேரலை நிகழ்ச்சிகளை


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்
இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

தவறாமல் பாருங்கள். நம்பிக்கை டி.வி. வாயிலாக வருகிற அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை பாருங்கள்.

ஊழியத்தை நேசித்து எங்களுக்காக தினந்தோரும் உங்கள் வீடுகளிலிருந்தே ஜெபிக்க விரும்புகிறவர்கள் 9488932937 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

எங்கள் அப்பாவின் நல்ல சுகத்திற்காகவும், எங்கள் அம்மாவின் நல்ல ஆரோக்கியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சுக, பெலனுக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரோடும் இருப்பாராக!

**கிறிஸ்துவின் பணியில்**
**Dr. ஜேன் ஜாஷ்வா**








Tamil WhatsApp No: +91 95004 87059




# வல்லமையான பாதுகாவலர்
# THE MIGHTY DEFENDER



## தேவ செய்தி

Rev. Dr. A. **ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்களே! தேவ பிள்ளைகளே!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். 2026-ம் ஆண்டு துவங்கி, ஒரு மாதம் கடந்து விட்டது. இந்த புதிய மாதத்தில் நாம் நுழைவதற்கு கிருபை செய்த தேவனை துதிப்போம். ஒவ்வொரு நாளையும் கர்த்தர் நமக்கு ஈவாக தந்துக்கொண்டு இருக்கிறார். அந்தந்த நாளுக்குரிய கிருபைகளை தருகின்ற தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இந்த மாதத்திலும் கர்த்தருடைய வார்த்தையை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். **கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப் போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். ஏசாயா 25:4.** ஆம். கர்த்தரே நம் பெலன், அவரே நமக்கு திடனும், அடைக்கலமும், நம்மோடுகூட வருகின்ற நிழலுமானவர். இஸ்ரவேல் மக்கள் கஷ்டமான, நெருக்கமான ஒரு சூழ்நிலையில் வாழ்ந்துக் கொண்டிருந்தப்பொழுதுதான் இந்த அற்புதமான வார்த்தையை கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் தந்துள்ளார். ஏசாயா 25-ம் அதிகாரத்தில் உள்ள 12 வசனங்களும் கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக, ஜனங்கள் அவரை துதிக்கின்ற ஒரு நிகழ்வாக இருக்கிறது. முதல் ஐந்து வசனங்கள் தேவன் செய்த மகத்துவமான கிரியைகளுக்காக நன்றி சொல்லி, கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறவைகளாக இருக்கிறது. **ஏசாயா 25:4-ல்** உள்ள வாக்குத்தத்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கர்த்தர் கொடுக்கின்ற விசேஷித்த பாதுகாப்பை குறித்து எழுதப்பட்டுள்ளது.

ஆம், புதிய வருடத்தை துவங்கி ஒரு மாதம் கடந்துவிட்டது. மீதமுள்ள மாதங்கள் எப்படி இருக்கும்? என்ன நடக்கும்? என்று நீங்கள் யோசித்துக்கொண்டு இருக்கிறீர்களா? கலங்காதீர்கள்! இயேசு கிறிஸ்து உங்களோடுகூட இருக்கின்றாரா? என பாருங்கள். அது தான் முக்கியம். கர்த்தர் உங்களோடுகூட இருக்கும் பொழுது, உங்கள் கூட வரும்பொழுது நீங்கள் எதைக்குறித்தும் கலங்கவும், பயப்படவும் வேண்டாம் என்பதை உணர்த்தும் விதமாக கர்த்தர் மேற்கண்ட வாக்குத்தத்தத்தை தந்து உங்களை ஆசீர்வதிக்கிறார்.

**நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். ஏசாயா 25:4** இந்த வார்த்தை கிட்டத்தட்ட ஏழாம் நூற்றாண்டுக்கும், எட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் கூறப்பட்டுள்ளது. இராஜ்யபாரம் சாலொமோனுக்கு பிறகு இஸ்ரவேல், யூதா என இரண்டாக பிரிந்தது. யூதா கோத்திரத்திற்கு எருசலேம் தான் தலைநகராக இருந்தது. அந்த நாட்களில் உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா போன்ற ராஜாக்கள் வாழ்ந்த காலக்கட்டத்தில் தான் ஏசாயா தீர்க்கதரிசி இந்த வார்த்தைகளை

சொல்லி இருக்கிறார். ஏனென்றால் அசீரியா ராஜா மிகவும் வல்லமையோடு இராஜ்யபாரம் செய்த அந்த நேரத்திலே, யூதா இராஜ்யபாரத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் போர் வரலாம் என்கிற அச்சுறுத்தல் இருந்துக்கொண்டிருந்தது. ஏனென்றால் சனகெரிப் எருசலேமை முற்றுகை யிட்ட ஒரு காலம் அது. இவைகள் எல்லாம் அரசியல் பின்னனியில் நடந்தது. இத்தகைய காலக்கட்டத்தில் மக்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் தடுமாற்றங்கள் இருந்தது. யேகோவா வழிபாடு, விக்கிரக வழிபாடு என இரண்டு விதமான காரியங்கள் அங்கே காணப்பட்டது. அத்துடன் சமூக அநீதிகள் நிறைந் திருந்தது, ஏழை எளிய மக்கள் ஒடுக்கப்பட்ட ஒரு காலமாகவும் இருந்தது. இத்தகைய சூழலில் ஏசாயா மூலம் தீர்க்கதரிசனம் உரைக்கப்படுகிறது. அதில் ஒரு பகுதி தான் இந்த நான்காம் வசனம். இந்த வசனத்தின் அடிப்படையில் நான்கு விதமான ஆசீர்வாதங்களை, வாக்குறுதிகளை கர்த்தர் நமக்கு கொடுக்கின்றார். இவைகளை நாம் தியானித்து தேவனிடமிருந்து நான்கு ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

# கர்த்தர் நமது பெலனாயிருக்கிறார்!

## (God is our Strength)

**ஏசாயா 25:4-ல் கர்த்தர் ஏழைக்குப் பெலனாயிருக்கிறார்** என சொல்லப்பட்டுள்ளது. இங்கு ஏழை என்றால் பொருளாதாரத்திலே பின்தங்கிய மக்களை மாத்திரம் நாம் சொல்ல முடியாது. பல காரணங்களால் ஒதுக்கப்பட்ட மக்கள், நசுக்கப்பட்ட மக்கள், நம்பிக்கையற்ற மக்கள், அரசியல் செல்வாக்கு இல்லாத மக்கள், எவ்வித பாதுகாப்பும் இல்லாத மக்களையே ஏழை என சொல்லமுடியும். இவ்வாறு பலவிதத்திலும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் நாம் ஏழை, எளியவர்கள் என எடுத்துக்கொள்ள வேண்டும். இது தான் வேதத்தின் அடிப்படையிலும் நமக்கு கற்றுக்கொடுக்கப்படுகின்றது.

நன்கு செயல்படமுடியாத, புறக்கணிக் கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களைப் பார்த்துதான் கர்த்தர் **"நான் உங்கள் பெலன்"** (I am your strength) என சொல்கிறார். நம்பிக்கையற்ற மக்களுக்கு இது ஒரு நம்பிக்கையாக இருக்கிறது. இவர்கள் சத்தமே வெளியே கேட்க முடியாத நிலையில், **'உன் வாயை திற'** என்கிற உந்துதலை தேவன் கொடுக்கிறார். ஏழைகள் எல்லாம் விளிம்பு நிலையில் இருக்க வேண்டிய மக்கள் அல்ல, மத்தியில் இருக்க வேண்டிய மக்கள் என்ற ஒரு நம்பிக்கையை, புத்துணர்ச்சியை கர்த்தர் தருகிறார். நான் உங்களுடன் வருவேன், உங்களுக்கு பெலனாக இருக்கிறேன் என்று வாக்கு கொடுக்கிறார். பெலன் உள்ள தேவன் உங்களுடன்கூட வரும்பொழுது அவர் எல்லா வற்றையும் பார்த்துக் கொள்வார். அதனால் தான் பக்தன் பவுல் **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13)** என கூறுகிறார். இந்த பெலனை ஆண்டவர் தம் பிள்ளைகளுக்கு தருகிறார். அத்துடன் கர்த்தர் "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி 12:9) என்று சொல்லி, பவுலை பெலப்படுத்துகிறார். இது தான் முக்கியம்.

பிரியமானவர்களே, நான் பெலவீனன், நான் நெருக்கப்பட்டவன், ஒன்றுமே இல்லாத வன், புறக்கணிக்கப்பட்டவன், தள்ளி வைக்கப் பட்டவன் என நினைக்க வேண்டாம். "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு என அறிக்கை செய்யுங்கள்". எத்தகைய பெலவீனமாக இருந்தாலும் உங்களைப் பெலப்படுத்துவதற்கு கர்த்தர் உண்மையுள்ளவராக இருக்கிறார். ஒருவேளை அது சரீர பெலவீனமாக இருக்கலாம் அல்லது ஆவிக்குரிய பெலவீனமாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் சரி, கர்த்தர் இந்த மாதத்தில் உங்களுக்கு பெலனாக இருப்பார்



என நம்புங்கள். உங்களால் வாழ முடியும், வேலை செய்ய முடியும், சவால்களை எதிர்த்து ஜெயிக்க முடியும் என்கிற தைரியத்தை கர்த்தர் உங்களுக்கு கொடுப்பார்.

**கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம் பண்ணு, நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவு பகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான். 1 இராஜா.19:7-8**

அன்பானவர்களே! ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் சோர்ந்துப்போய் இருக்கிறீர்களா? மிகவும் சோர்ந்து, பயந்து உறங்கிக்கொண்டிருந்த எலியாவை தூதன் தட்டி எழுப்பி இந்த அப்பத்தை சாப்பிடு என்று சொன்னப்பிறகு, அந்த போஜனத்தை உண்டு, பெலன் அடைந்து நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் மலையை நோக்கி நடந்துப்போனான். இது தான் கர்த்தர் தரும் பெலன். அவர் நம்மை பெலப்படுத்தும்பொழுது அதனுடைய ஆற்றல் பல மடங்காக இருக்கும். புதிய ஏற்பாட்டில், மலைப்பிரசங்கத்தில் இயேசு **"ஆவியில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள்" (மத்.5:13)** என கூறுகிறார். இந்த இடத்திலும் எளிமை என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. **கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்.(லூக்கா 4:18)** இயேசு குழந்தையாக எளிய கோலத்தில் இந்த பூமியில் பிறந்தார். அத்துடன் **'தரித்திரருக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவே, பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகம் பண்ணினார்'** என இயேசு தான் வந்ததன் நோக்கத்தை தெளிவாக கூறுகிறார். இதிலிருந்து நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஏழை எளிய மக்களின் பக்கத்தில்தான் இருக்கிறார் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். ஏழைகளின் நியாயத்தை புரட்ட கர்த்தர் விடமாட்டார். அவர் பெலனாக, திடனாக, நம்பிக்கையை கொடுப்பவராக உங்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவார். இந்த நாட்களில் உங்களுக்கு உதவ யாருமில்லை என நினைக்க வேண்டாம், பிள்ளைகள் என்னை பார்த்துக் கொள்வார்களா? என பயப்பட வேண்டாம், என்னை கைதூக்கிவிட யார் இருக்கிறார்கள் என கலங்க வேண்டாம். கர்த்தர் உங்களோடு இருக்கும்பொழுது அனைத்து காரியங்களையும் அவர் பொறுப்பெடுத்துக்கொள்வார்.

பிரியமானவர்களே! உங்கள் பெலவீனம் என்ன? எந்த பகுதியில் தேவனுடைய பெலன் உங்களுக்கு தேவைப்படுகிறது என்பதை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். இந்த மாதத்தில் பல புதிய சவால்கள் உங்களுக்கு முன்பாக இருக்கலாம் சோர்ந்து போகதீர்கள்! புதிய சவால்களை நீங்கள் மேற்கொள்ளக் கூடிய பெலனை அவர் உங்களுக்கு தருவார். உங்களுக்கு முன்பாக இருக்கிற பணிகளை எளிதாக, சுலபமாக நீங்கள் செய்து முடிக்க உதவி செய்வார்.



தேவன் உங்கள் கரத்தை பிடித்திருக்கும் பொழுது எல்லா பயமும் நீங்கி விடும். இதற்கு மேல் என்னால் எதுவுமே முடியாது என்ற நிலை வரும்பொழுது கர்த்தருடைய வல்லமை உங்களிடத்தில் விளங்கும். உங்கள் முடிவு அவருடைய ஆரம்பமாக இருக்கும். இது தான் **"என்னுடைய முடிவு என்று நீங்கள் சொல்வீர்கள்", கர்த்தர் "இனிதான் என் ஆரம்பமே உள்ளது"** என்று சொல்வார். தேவ பிள்ளைகளே! தைரியமாயிருங்கள் அவர் உங்கள் பெலனாக

இருக்கும்பொழுது எல்லாமே சாத்தியம் தான். அவர் உங்களை பெலப்படுத்தி அற்புதமாக வழிநடத்துவார்.

# கர்த்தர் நமது அடைக்கலமாக இருக்கிறார்!

## (God is our Refuge)

**பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலம் என ஏசாயா 25:4-ல்** பார்க்கிறோம். ஆம், பெருவெள்ளத்திற்கு தப்பும் அடைக்கலமாக தேவன் இருக்கிறார். புயல், கடல் கொந்தளிப்பு எப்பொழுது வரும்? எப்படி வரும்? என சொல்லமுடியாது. 2004-ல் ஏற்பட்ட சுனாமி சொல்லிக்கொண்டு வரவில்லை. இயற்கை சீற்றங்கள் ஒரு போதும் சொல்லிக்கொண்டு வராது. அத்தகைய நிலையில் நான் உன் அடைக்கலமாக இருக்கிறேன் என கர்த்தர் நம்மை தைரியப்படுத்துகிறார். அநேக சமயங்களில் சூறாவளி காற்றுக்கு தப்புவதற்காக shelter வைத்திருப்பார்கள். Hurricane Shelters ஏனென்றால் சூறாவளி வரும்பொழுது எல்லாவற்றையும் அப்படியே அடித்துக்கொண்டு போய்விடும். ஆகவே பாதுகாப்பான இடங்களுக்கு சென்று அடைக்கலம் புகும்படி வானிலை மையத்திலிருந்து நமக்கு எச்சரிக்கை செய்வார்கள். வெளிநாடுகளில் குண்டு வெடிப்புகளிலிருந்து தப்புவதற்காக பதுங்கு குழிகளில் போய் அடைக்கலம் புகுவார்கள். இவ்வாறு நாமும் நமக்கு அடைக்கலமாக இருக்கிற கர்த்தரை தேடி ஓட வேண்டும். அவ்வாறு ஓடினால் நாம் பாதுகாக்கப்படுவோம். எதிர்பாராத நேரத்தில் சூறாவளி போன்று பிரச்சனைகள் வரும்பொழுது, நம்மை பாதுகாக்க தேவனுடைய அடைக்கலத்தை தேடி ஓட வேண்டும். கர்த்தருடைய நாமம் நமக்கு பெரிய அடைக்கலமாக இருக்கிறது. அதற்குள் ஓடி தங்கினால் நாம் சுகமாய் இருக்கலாம். **"கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி. 18:10) தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.(சங்கீதம் 46:1)**

இயற்கையை யாராலும் தடுக்க முடியாது. ஏனென்றால், அது தேவன் படைத்த படைப்பு, அவருடைய கட்டுப்பாட்டிற்குள் அது உள்ளது. இயற்கையை சேதப்படுத்தினால் நிச்சயம் ஒரு நாள் அதினால் நாம் பாதிக்கப்படுவோம். இயற்கையை பேணிகாத்தால் எந்த ஆபத்தும் மனிதனுக்கு இருக்காது. இன்றைக்கு அநேகர் **"வன விலங்குகள் ஊருக்குள் வருவதாக"** கூறுகிறார்கள். ஆனால் வனவிலங்குகள் வாழும் காட்டிற்குள் சென்று மனிதன் மரங்களை வெட்டி தன் வீடுகளை அமைத்துக் கொண்டதின் விளைவே இந்த பிரச்சனைக்கு காரணம். இயற்கை சீற்றங்களிலிருந்து கர்த்தர் நம்மை பாதுகாக்கிறார். சூறாவளி போன்ற பயங்கரமான கொந்தளிப்பு வந்தாலும் அவர் நம்மை காப்பார்.

பிரியமானவர்களே, திடீரென்று ஏற்படுகிற ஒரு பெலவீனத்தின் மத்தியில் அல்லது ஒரு பெரிய பிரச்சனை வந்து நீங்கள் மேற்கொண்டு என்ன செய்வது என புரியாமல், அறியாமல் திகைத்து நிற்கும்நேரத்தில், கர்த்தரே உங்களுக்கு அடைக்கலம் என்பதை மறந்து விடாதீர்கள். ஒருவேளை பொருளாதார நெருக்கடியில் உழன்றுக் கொண்டு இருக்கிறீர்களா? கலங்காதீர்கள்! இந்த நிலையை மாற்ற தேவனால் கூடும் என்று அவர் வாக்குக்கொடுத்துள்ளார். பயங்கரமான காற்று அடித்தாலும், பயங்கரமான இயற்கை சீற்றம் போன்ற கஷ்டம் வந்தாலும் அதன் மத்தியில் தேவனுடைய கரம் உங்களோடிருந்து உங்களுக்கு அமைதியை கொடுக்கும். பழைய ஏற்பாட்டு காலத்திலே தவறு செய்த ஒருவன் அடைக்கல பட்டணத்திற்குள் வந்து சேர்ந்துவிட்டால் அவனை யாரும் ஒன்றும் செய்யக்கூடாது. அவன் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் அங்கே சென்றுவிட்டால் அவனை உள்ளே சென்று தண்டிக்க முடியாது. ஏனென்றால் அது



அடைக்கல பட்டணம்! இன்றைக்கு உங்களுக்கு இருக்கிற ஒரே அடைக்கல பட்டணம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவர்தான் உங்களுக்கு அடைக்கலமாக (shelter) இருக்கிறார்.

ஒரு சமயம் இயேசு படகில் சென்றுக் கொண்டிருக்கிறார். பயங்கர காற்று, புயல் அடிக்கிறது. அந்த நேரத்தில் இயேசு படகில் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது சீஷர்கள் இயேசுவை எழுப்பி, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா' என கதறுகிறார்கள். இயேசு உடனே எழுந்து காற்றையும், கடலையும் பார்த்து **"இரையாதே, அமைதியாயிரு"** என்று இயற்கைக்கு கட்டளை கொடுத்தவுடன் இயற்கை அமைதியானது. **அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. மாற்கு 4:39.** இன்றைக்கு மனிதர்கள் வாழ்க்கையில் நிகழ்கிற பல்வேறுவிதமான சூறாவளி போன்ற பிரச்சனைகளுக்கெல்லாம் இயேசுகிறிஸ்து ஒருவரே அடைக்கலமாக இருக்க முடியும். அதையே இயேசு **"என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28)** எனக் கூறுகிறார். ஏனென்றால் இயேசுவே உயர்ந்த அடைக்கலமாயிருக்கிறார். (He is the Ultimate shelter)

அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையில் எந்த பகுதியில் உங்களுக்குரிய பாதுகாப்பு குறைவாக இருக்கிறது என கண்டறிந்து செயல்படுங்கள். ஒரு வேளை பொருளாதாரத்தில் அல்லது உடல்நலத்தில் அல்லது சமாதான குறைவில் நீங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்களா என்பதை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் வாழ்வில் உத்திரவாதமே இல்லாத ஒரு சூழ்நிலையில் சென்று கொண்டிருக்கிறீர்களா? எதிர்காலத்தைக் குறித்து சரியான தீர்மானம் எடுக்க முடியாதபடி தடுமாறிக்கொண்டு இருக்கிறீர்களா? குடும்ப வாழ்க்கையில் ஒரு பிடிப்பு இல்லாமல் தத்தளித்து கொண்டிருக்கிறீர்களா? உங்களை பார்த்து **"நான் உனக்கு அடைக்கலமாக, பாதுகாப்பாக இருக்கிறேன்"** என்று கர்த்தர் வாக்குக்கொடுக்கிறார். **உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். சங்கீதம் 91:1-2** ஆம் கர்த்தருடைய செட்டையின் கீழ் உங்களுக்கு அடைக்கலம் உண்டாயிருக்கும். சூறாவளியிலிருந்து பாதுகாப்பதற்குரிய shelter ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல உங்களுக்குரிய அடைக்கலமாக கர்த்தர் இருக்கிறார். நீங்கள் அந்த அடைக்கலத்தை தேடி ஓடி வாருங்கள். சுகமாயிருப்பீர்கள்.

# கர்த்தர் நமது நிழலாய் இருக்கிறார்!

## (God is Our Shadow)

**ஏசாயா 25:4-ல் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்** என ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார். கர்த்தரை நம்புகிற, விசுவாசிக்கிற ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் கர்த்தர் நிழலாக இருக்கின்றார். வெயிலில் சென்று கொண்டிருக்கிற மனிதன் ஒரு மரத்தின் நிழலை பார்த்த உடனே மிகவும் மகிழ்ச்சி அடைகிறான். காரணம் வெயிலின் தாக்கத்தினால் அந்த மனிதன் அடைந்த வேதனை நிழலின் அருமையினால் மறைந்து போய்விடுகிறது. அதுபோல பாலைவனத்தில் பிரயாணம் பண்ணுகிற ஜனங்கள் தண்ணீர் கிடைக்கின்றதா? இல்லையா? என தேடுவதைக்காட்டிலும் எங்கேயாவது நிழல் உண்டா? என்றே முதலில் தேடுவார்கள். ஒரு பெரிய பாறை இருந்தால்கூட போதும் அதன் நிழலில் ஓய்வு எடுக்கலாம் என்றே நினைப்பார்கள். சுட்டெரிக்கிற அக்கினி நட்சத்திர வெயில் அடிக்கும்பொழுது ஒரு மரத்தின் நிழலில்

போய் நின்று பாருங்கள். அந்த மரநிழலின் குளிர்ச்சி மிகுந்த இளைப்பாறுதலை உங்களுக்கு தருவதாக இருக்கும்.

**சங்கீதம் 121:5-ல் "கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்"** என வாசிக்கிறோம். தேவனுடைய நிழல் உங்களுக்கு மிக முக்கியமானதாகவும், எல்லா நேரத்திலும் அவசியமானதாகவும் இருக்கிறது. சில சமயங் களில் கடினமான வேலைப்பளுவின் நிமித்தம் ஒருவித மன அழுத்தம், சோர்வு, கோபம் ஏற்படும். அந்த நேரத்தில் அமைதி, சமாதானம், ஒத்தாசை தேவைப்படும். அப்பொழுது நீங்கள் கர்த்தரை நோக்கிப்பாருங்கள். அவர் உங்களுக்கு நிழலாக இருப்பார். எல்லாம் முடிந்து விட்டது, இதற்கு மேல் என்ன செய்வது என தெரியாமல், நீங்கள் திகைத்து நிற்கும்பொழுது கர்த்தரை நோக்கிப்பாருங்கள். அவர் நிழலாக வந்து உதவி செய்வார். இன்னும் கொஞ்சம் நன்றாக இப்பணியை செய்திருக்கலாம், ஆனால் என்னால் இயலவில்லையே என சொல்லி, கர்த்தரிடம் வரும்பொழுது கர்த்தருடைய நிழல் உங்களை தாங்கும்.

நல்ல நிலையில் உள்ள ஒரு கணினி தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும்பொழுது, திடீரென பழுதடைந்தால் அதை சரிசெய்யும் பொறியாளர், "கம்ப்யூட்டருக்கு சற்று ஓய்வு கொடுத்து refresh செய்யும்படி கூறுவார். அதுபோல நீங்கள் தொடர்ந்து பணிகளை செய்து சோர்ந்து போகும்பொழுது நீங்களே உங்களை refresh செய்துக்கொள்ளுங்கள். அப்பொழுது ஒரு புத்துணர்ச்சி உங்களுக்குள் ஏற்படும். அந்த refresh தான் தேவனுடைய நிழல். அந்த நிழல் உங்கள் மீது பட்டாலே போதும் நீங்கள் புத்துணர்ச்சிஅடைந்துவிடுவீர்கள். வாழ்க்கையில் ஏராளமான தேவைகள் உங்களுக்கு இருக்கும். அதை எல்லாம் நினைத்து நினைத்து நீங்கள் திகிலடைந்து, கலங்கி காணப்படலாம். இத்தகைய நேரங்களில் **'உங்களுக்கு நிழலாக நான் இருந்து உங்களை பாதுகாப்பேன்'** என்று கர்த்தர் கூறுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் **"எந்த சூழ்நிலையிலும் நான் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன்" (பிலி.4:11)** எனக் கூறுகிறார். காரணம் அவன் கர்த்தருடைய நிழலை முழுவதுமாக அனுபவித்தவன். கர்த்தரு டைய நிழலை நம்பி வாழ்ந்தவன், கர்த்தருடைய நிழலுக்குள் தன்னை வைத்துக்கொண்டவன். ஆகவே தைரியமாக சொல்லுகிறான், எந்த சூழ்நிலையிலும் நான் மனரம்மியமாக வாழ கற்றுக்கொண்டேன். நீங்களும் கர்த்தருக்குள் இருங்கள். அவர் உங்களுக்கு எப்பொழுதும் நிழலாக இருப்பார்.

பேதுருவின் நிழல் பட்டு பிணியாளிகள் சொஸ்தமானார்கள். என்பதை அப்போஸ்தலர் 5:15-16ல் வாசிக்கிறோம் தேவனுடைய நிழல் வல்லமையுடையது, அது உங்களோடு வந்தாலே போதும். கொடூரமான பிரச்சனைகள் தாக்கினாலும், பலவிதமான நெருக்கங்கள், கஷ்டங்கள், சொல்லமுடியாத வேதனைகள் வந்தாலும் சர்வவல்ல தேவன் உங்கள் மத்தியில் நிழலாக வந்து உங்களை பாதுகாத்து வழி நடத்துவார். **எண்ணாகமம் 14:9-ல் "அவர்களை காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று"** என்று பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் கர்த்தரு டைய பாதுகாப்பு அவர்களை விட்டு விலகிவிட்டது என்பதாகும், கர்த்தருடைய நிழல் இருந்தால் தான் உங்களுக்கு பாதுகாப்பு. என்ன துன்பம் வந்தாலும் தேவனுடைய நிழல் தான் உங்களை பாதுகாக்கும். எனவே கலங்காதீர்கள்! பயப்படாதீர்கள்! கர்த்தர் உங்களோடே நிழலாக இருக்கிறார்.

# கர்த்தர் நமது பாதுகாவலராயிருக்கிறார்!

## (God is Our Defender)

அன்றாட வாழ்வில் குடும்பத்திலிருந்து ஆரம்பித்து வேலை ஸ்தலம் வரைக்கும் ஏராளமான சத்துருக்களை, எதிரிகளின் சூழ்ச்சி வலைகளையெல்லாம் நீங்கள் தாண்டி வரவேண்டியிருக்கும். சில நேரங்களில் உங்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட காரியங்களை நீங்கள் சந்திக்க நேரிடும்பொழுது தேவன் தாமே உங்களுடைய பாதுகாவலராக இருந்து உதவி செய்வார். அவரே உங்களுக்கு மதிலாக இருந்து மோதி அடிக்கிற பெருவெள்ளத்தை கட்டுப்படுத்துவார். தேவன் உங்களுக்கு மதிலாக, சுவராக இருக்கிறார். எதிரிகள் எந்தப் பக்கத்திலிருந்தும் வந்து உங்களை தாக்கலாம். கூடஇருந்தேகுழிபறிக்கிறவர்களும்இருப்பார்கள், உங்களிடம் நன்றாக பேசுவார்கள், ஆனால் அவர்கள் தான் உங்களுக்கு விரோதமாக முதலில் எழும்புவார்கள். நேருக்கு நேராக பேசுகிறவர்களைப் பற்றி பயமில்லை. எதிரிகள் என்று சொல்லும்பொழுது வேலை ஸ்தலத்தில், வியாபாரங்களில், சொத்து காரியங்களில் திடீரென வரலாம், நீங்கள் வாழ்க்கையில் முன்னேறி விடாதபடி சில முட்டுக்கட்டைகளை போடுகிற சத்துருக்களும் மறைந்திருந்து தாக்கலாம். அத்தகைய நிலையில் கர்த்தர் உங்களை பாதுகாப்பார், மதிலாக இருப்பார். மதில்சுவர் என்று சொல்லும் பொழுது சாதாரணமாக நினைத்து விட வேண்டாம். எரிகோ கோட்டை சுவரில் இரதங்கள் ஓடும், குதிரைகள் ஓடும், அந்த சுவருக்கு மேலே வீடு கட்டி குடியிருந்தார்கள். அந்த அளவிற்கு மிகப்பெரிய கோட்டை சுவராக அது காணப்பட்டது. அப்படிப்பட்ட கோட்டைகளே ஒரு நேரத்தில் விழுந்துவிட்டது. ஆனால் தேவனே நமக்கு கோட்டை சுவராக இருப்பார் என்றால் அவரை சாய்க்க எவராலும் முடியாது.

பிரியமானவர்களே. மதிலை மோதியடிப்பது போன்ற பெரு வெள்ளம் வந்தாலும் இயேசுவாகிய கோட்டையை யாரும் நொறுக்க முடியாது. **"தேவன் நம்முடைய பட்சத்தி லிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர்8:31)** கர்த்தர் நம்முடைய பட்சத்தில் இருக்கும் பொழுது யார் நம்மை எதிர்த்து நிற்க முடியும். எந்த கோலியாத் வந்தாலும் உங்களை ஒன்றும் செய்யமுடியாது. ஏனென்றால் யுத்தம் உங்களுடையது அல்ல, அது கர்த்தருடையது! **"கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத்தி.14:14) உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; (ஏசாயா 54:17)** கர்த்தருடைய பிள்ளையாக நீங்கள் இருக்கும்பொழுது உங்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எப்படிப்பட்ட வெள்ளம் வந்தாலும் அது உங்களை பாதிக்காது.

**கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்பு மானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?**

**என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள்.**

**எனக்கு விரோதமாக ஒரு பாளய மிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என் மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.(சங். 27:1-3)**

மேற்சொல்லப்பட்ட வசனங்களில் கூறியுள்ளபடி கர்த்தர் உங்களுக்கு அரணாக இருக்கும்பொழுது யாராலும் நீங்கள் அசைக்கப் படுவதில்லை. பாதிக்கப்பட்ட நிலைமையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் கர்த்தர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார், அவரை தாண்டி எந்த சத்துருவும் உங்கள் எல்லைக்குள் ஊடுறவ முடியாது.

அன்பு தேவ பிள்ளைகளே! நீங்கள் ஆவிக்குரிய யுத்த களத்திலே வந்து பொல்லாத பிசாசுடன் யுத்தம் செய்ய வேண்டும். **"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத் தனங்களோடும், அதிகாரங்களோடும், இப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவி**

களின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபேசியர் 6:12)** பிசாசுடன் யுத்தம் செய்து, ஜனங்களை அவனிடமிருந்து விடுவிப்பதற்கு, தேவனுடைய உதவி நமக்கு தேவையாக இருக்கிறது. கர்த்தர் ஒவ்வொரு வருக்கும் ஒரு சிறந்த எதிர்கால திட்டம் ஒன்றை வைத்திருக்கிறார். அதை திருடுவதற்கு, அந்த திட்டத்தை அழிப்பதற்கு பிசாசு வருவான். அதுவும் மதிலை மோதி அடிக்கிற பெருவெள்ளம் போல மோதுவான். உங்களை ஒன்றுமில்லாமல் ஆக்க வேண்டும் என்று முயற்சிப்பான். அந்த சூழ்நிலையில் கர்த்தர் உங்களுக்கு மதிலாக இருந்து பாதுகாப்பார். எல்லா கஷ்டத்திலிருந்தும், போராட்டத்திலிருந்தும், இக்கட்டுகளிலிருந்தும் கர்த்தர் உங்களை விடுவித்து பாதுகாப்பார்.

அன்பான தேவ ஜனமே! நான்கு விதமான ஆசீர்வாதங்களை குறித்து நாம் இச்செய்தியில் தியானித்தோம்.

(1) கர்த்தர் உங்களுக்கு பெலனாக இருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்கள் பெலவீனம் எது என்பதை நீங்கள் கண்டுபிடித்து, அவற்றை கர்த்தரின் பெலனைக் கொண்டு சரிசெய்துகொள்ளுங்கள்.

(2) கர்த்தர் உங்களுக்கு அடைக்கலமாக இருக்கிறார். எந்த நிலையில் உங்களுக்கு அடைக்கலம் தேவை என்பதை அறிந்து செயல்படுங்கள். நம்முடைய தேவன் ஏற்கனவே அடைக்கலமாக இருக்கிறார் என்பதை விசுவாசியுங்கள். அந்த அடைக்கலத்திற்குள் ஒவ்வொரு நாளும் சுகமாய் வாழுங்கள்.

(3) கர்த்தர் உங்களுக்கு நிழலாக இருக்கிறார். வாக்குப்பண்ணின தேவன் வாக்கு மாறாதவர் அவர் எப்பொழுதும் நிழலாக வருவார். நீங்கள் நம்பியிருந்த உறவுகள், நட்புகள், அமைப்புகள் எதுவும் உங்களோடு வர இயலாத நேரத்தில் எல்லாம், கர்த்தர் உங்களுக்கு நிழலாக வருவார் என்பதை விசுவாசியுங்கள்.

(4) கர்த்தர் உங்களுக்கு பாதுகாவலராக இருக்கிறார். மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளம் போல பிரச்சனைகள் சீறிக்கொண்டு வந்தாலும், உங்களுடைய பாதுகாவலராக கர்த்தர் இருக்கும்வரைக்கும் ஒருவரும் உங்களை தொட முடியாது. **"உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான். சகரியா 2:8 என வேதம் கூறுகிறது.**

இந்த நான்கு ஆசீர்வாதங்களை இந்த மாதத்தில் நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் தாமே இந்த மாதம் முழுவதும் உங்களோடு இருந்து உங்களை வழி நடத்தி ஆசீர்வதிப்பாராக!








# துதி அறிக்கை

## அற்புத சுகம் கிடைத்தது!



என்னுடைய மூத்த மகன் பெயர் பெலிக்ஸ். 2008-ம் ஆண்டு அவன் வேலை செய்துக் கொண்டிருந்தப்பொழுது 3-வது மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டான். அதனால் அவனுடைய கழுத்து மற்றும்முதுகுதண்டுவடத்தில்அதிகபாதிப்புஏற்பட்டது. உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனவும், அதற்கு இரண்டரை லட்சம் ரூபாய் செலவாகும் எனவும் மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். அவ்வளவு பணம் எங்களிடம் இல்லை. ஆகவே என்ன செய்வது என திகைத்து நின்றோம். அப்பொழுது திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு **Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா மகனுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஆப்ரேஷன் இல்லாமலே கர்த்தர் சுகம் தருவார், மகனுக்கு திருமணம் நடைபெறும் என சொல்லி அனுப்பினார்கள். ஐயா சொன்ன வார்த்தையின்படியே மகன் அறுவை சிகிச்சையின்றி பரிபூரண சுகத்துடன் வாழ்ந்துக்கொண்டிருக்கிறான். மகனுக்கு திருமணம் ஆகி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அற்புத சுகத்தை தந்த தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- திரு.சந்தன சாமி, வேளாங்கண்ணி.**

## கடுமையான முதுகு வலி நீங்கியது!



நான் பல மாதங்களாக முதுகு வலியினால் அதிக கஷ்டப்பட்டேன். முதுகு தண்டுவடத்தின் பகுதியில் L4 அதிக வலி இருந்தது. நான் சொன்னால் யாராலும் புரிந்துக்கொள்ள முடியாது, அந்த அளவுக்கு வலி, வேதனையை அனுபவித் துக்கொண்டிருந்தேன். அந்த வலியுடன்தான் சென்னையில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில் **Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்னார்கள், முதுகு வலியுடன் வந்திருக்கிற ஒருவரை கர்த்தர் சுகமாக்குகிறார் என சொன்னவுடன், எனக்கு இருந்த அந்த வலி, வேதனை முற்றிலும் நீங்கியது. என்னை அற்புதமாய் சுகமாக்கிய கர்த்தரை மனதார துதிக்கிறேன்.**

**- Sis. ஆக்னஸ், சென்னை.**

# பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!



என்னுடைய கால் பாதத்தில் இரண்டரை வருடமாக இரத்தம் வடிந்துக் கொண்டிருந்தது. அதற்காக பல சிகிச்சைகள் எடுத்தும் சுகமாகவில்லை. **திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து ஆண்டவரிடம், எனக்கு சுகமானால் அடுத்த முறை நான் சாட்சி சொல்வேன் என பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். கர்த்தர் அற்புதம் செய்தார். இப்பொழுது இரத்தம் வடிவது நின்றுவிட்டது. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். என்னை அதிசயமாய் சுகமாக்கிய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். – திரு. ஆரோன், திருச்சி.**

# கால் ஊனம் குணமானது!



கடந்த வருடம் ஒரு விபத்தில் சிக்கி என்னுடைய கால் fracture ஆனது. அதற்கான சிகிச்சை எடுத்துக்கொண்ட பிறகும், வாக்கர் உதவியுடன்தான் நடக்க முடிந்தது. திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தபொழுது, **ஐயா அம்மா இருவரும் எனக்காக ஜெபித்தார்கள். வீட்டிற்கு சென்று நாங்களும் ஜெபித்து வந்தோம். 15 நாட்களுக்குப் பிறகு "உன் கால் சரியாகிவிட்டது, நீ எழுந்து நட" என்ற குரலைக் கேட்டேன். அதன்பின் வாக்கர் இல்லாமல் நன்றாக நடந்து வருகிறேன். என்னை தொட்டு சுகமாக்கிய கர்த்தரை துதிக்கிறேன். – திரு. பழனிவேல், புதுக்கோட்டை.**

# குழந்தை பாக்கியம் உண்டானது!



2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் நானும் என் மனைவியும் கலந்துக்கொண்டோம். என் மனைவிக்கு கடுமையான PCOD பிரச்சனை இருந்தது. தனி ஜெபத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்கும்படி சொன்னோம். ஐயா எங்கள் இருவருக்காகவும் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் எங்களுக்கு மனமிரங்கினார். 2021-ம் ஆண்டு கர்த்தர் ஒரு பெண் குழந்தையை தந்து எங்களை ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை!**





# பொருத்தனையோடு ஜெபித்தேன்!

கடந்த மாதங்களில் நடைபெற்ற திருச்சி குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் வந்திருந்து என் மகளுடைய பிரசவத்திற்காக பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். **கர்த்தர் இரங்கி மகளுக்கு சுகபிரசவத்தில் ஆண் குழந்தையை பெற்றெடுக்க உதவி செய்தார். அதற்காக என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன். – திரு. சந்தியாகு**

# ஆப்ரேஷன் இன்றி அற்புத சுகம் பெற்றேன்!



எனக்கு கேன்சர் நோய் இருந்ததால் ரேடியேஷன் கொடுத்தார்கள். அதனைத் தொடர்ந்து வயிற்றில் நான்கு கட்டிகள் உருவானது. கர்ப்பப்பை எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறியிருந்தார் கள். **திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொல்லி இந்த பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்றபொழுது ஸ்கேன் எடுக்கச் சொன்னார்கள். அந்த ஸ்கேன் ரிப்போர்டை பார்த்து இனி ஆப்ரேஷன் வேண்டாம் என சொல்லி அனுப்பிவிட்டார்கள். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். – திருமதி. சவரியம்மாள், திருச்சி.**

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

**English WhatsApp No: +91 94889 32937**

# FEBRURY 2026
## தினசரி வாக்குத்தத்த வசனம்

1 கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார். (யோவேல் 3:16)

2 கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும். (நீதி.14:26)

3 கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன். (நெகேமியா 8:10)

4 நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். (ஏசாயா 51:16)

5 ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன். (ஆபகூக் 3:19)

6 உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும்,... இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். (சங்.84:5)

7 நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள். (2நாளா.15:7)

8 அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும். (சங்.112:7)

9 நம்பிக்கை உண்டாயிருக்கிறதினால் திடனாயிருப்பீர். (யோபு 11:18)

10 என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர். (சங்.138:3)

11 நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் ...., பதிலளிக்கவும் வருவார். (ஏசாயா 35:4)

12 அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய். (சங்.91:4)

13 தீங்குநாளில் நீரே என் அடைக்கலம். (எரேமியா 17:17)

14 தேவனே எனக்கு உயர்ந்த அடைக்கலம். (சங்.59:9)



# FEBRURY 2026
## தினசரி வாக்குத்தத்த வசனம்

15 கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார். (சங்.94:22)

16 அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். (உபா.33:27)

17 நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். (சங்.37:39)

18 கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப் படுவான். (நீதி.29:25)

19 யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக. (சங்.20:1)

20 கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். (சங்.121:5)

21 அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும்.... விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார். (ஏசா.32:2)

22 கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார். (சங்.29:11)

23 ஒத்தாசை செய்யவும் விழப்பண்ணவும் தேவனாலே கூடும். (2நாளாகமம் 25:8)

24 என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். (சங்.91:14)

25 நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். (ஏசா.25:4)

26 யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சங்.46:7)

27 ....கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. (ரூத் 2:12)

28 கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர். (சங்.28:8)

# S. J. SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும்
திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். (சங்.82:3)
வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான்,
அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்;
அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். (சங்.112:9)
தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான். (நீதி.28:27a)














நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஒலப்பாளையம், கருப்பண்ண நகர், சின்னசோளி பாளையம், குமாரசாமி பாளையம், சேளுர் செல்லப்பம்பாளையம், சின்ன மருதூர், ஜேடர் பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள ஏழை, எளிய, பின்தங்கிய நிலையில் உள்ள 110 பிள்ளைகளுக்கு மாலை நேர வகுப்புகளை S J SAVES TRUST மூலம் நடத்தி வருகிறோம். அவர்களுக்கு தினந்தோறும் இரவு உணவு வழங்கப்படுகிறது.

ஜனவரி மாதம் இவர்களை நேரில் சந்தித்து, இவர்கள் படிப்பிற்கு தேவையான பேனா, பென்சில், ரப்பர், ஸ்கேல், ஜாமன்றி பாக்ஸ், நோட்டுகள் அனைத்தும் தரப்பட்டது. அடிப்படை தேவைக்குரிய சோப்பு, தேங்காய் எண்ணெய், சீப்பு, பவுடர் மற்றும் அவர்களுடைய உடல் நலத்தை முன்னிட்டு டானிக், புரோட்டின் பவுடர், மதிய உணவாக பிரியாணி மற்றும் இனிப்பு, கார வகைகளை **Bro. Jonathan Moses அவர்கள் வழங்கினார்கள். அத்துடன் 110 பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் புத்தாடைகளை கொடுத்து மகிழ்ந்தோம்.**

தேவ தர்ஷினி என்ற மாணவி 8-ம் வகுப்பு படிக்கிறாள். இவளுக்கு தாய் தந்தை இருவரும் இல்லை. சந்தியா என்ற மாணவி 9-ம் வகுப்பு படிக்கிறாள். இவளுக்கு தந்தை இல்லை. இத்தகைய பின்தங்கிய நிலையில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு S. J. SAVES TRUST மூலம் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகிறது.

இந்தப் பணிக்கு தாராளமாய் உதவி செய்கிற பங்காளர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம். தொடர்ந்து நீங்கள் தாங்குங்கள். சங்கீதம் 112:9-ன்படி கர்த்தர் உங்களை மகிமையாய் உயர்த்துவார்.

### S. J. Saves Trust - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய

Bank A/C Name: SJ SAVES TRUST
Account No: 019150310875369
Bank Name: Tamilnadu Mercantile Bank
Branch: Palakarai, Trichy.
IFSC Code: TMBL 0000019










**Telugu WhatsApp No: +91 91770 87860**











# C.T. ஸ்டட்
# 1862-1931

## C.T. ஸ்டட்-ன் இளமைப்பருவம்



C.T.ஸ்டட் ஒரு பெரும் பணக்காரர். இவர் தந்தையின் ஆஸ்திகளோ ஏராளம், ஏராளம். இவர் ஒரு சிறந்த புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரும் ஆவார். இவருடைய 25-வது பிறந்த நாள் தினத்தில் இவரிடம் இருந்த சொத்து மதிப்பு 25 ஆயிரம் பவுன்கள் ஆகும். அவை முழுவதையும் ஊழியத்திற்காக கொடுத்துவிட்டார். அன்றைய கால கட்டத்தில் வாழ்ந்த மூடி பிரசங்கியாருக்கு ஐயாயிரம் பவுன்களையும், அனாதைகளின் தகப்பன் ஜார்ஜ் முல்லருக்கு ஐயாயிரம் பவுன்களையும், இரட்சண்ய சேனையின் தலைவரான வில்லியம் பூத்திற்கு நான்காயிரம் பவுன்களையும், ஹாலந்தில் பணிசெய்த ஜார்ஜ் என்பவருக்கு ஐயாயிரம் பவுன்களையும், மீதமுள்ள அனைத்து சொத்துக்களையும் பல ஊழியர்களுக்கு என பிரித்து அனுப்பினார்.

## C.T.ஸ்டட்-ன் மிஷனெரி பணிகள்

இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் மாணவர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகக் காரணமானார். இதனால் கேம்பிரிட்ஜ் எழுவர் குழு உருவானது. இவர்கள் அனைவரும் தங்களை மிஷனெரிகளாக ஒப்புக்கொடுத்தனர்.

சீனாவுக்கு மிஷனெரியாக சென்ற ஸ்டட் அங்கு பத்து வருடங்களும், இந்தியாவில் ஆறு வருடங்களும் மிஷனெரியாக பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஏராளமான ஆத்தும ஆதாயக்கூட்டங்களை நடத்தி, ஆயிரக்கணக்கானோரை ஆண்டவரின் பணிக்கு அர்ப்பணிக்கச் செய்தார்.

## இறுதிப்பயணம்

ஆப்பிரிக்கா கண்டத்தை நோக்கி இவருடைய இறுதிப்பயணம் அமைந்தது. அங்கு செல்வதற்கு முன் நோய்வாய்ப்பட்டார். இத்தகைய பெலவீனத்துடன் ஆப்பிரிக்கா செல்ல வேண்டாம் என அவருடைய மனைவி அறிவுறுத்தியபொழுதும், இயேசுவின் மேல் உள்ள தாகத்தால் தனித்து ஆப்பிரிக்கா சென்று 20 ஆண்டுகள் மிஷனெரியாக பணியாற்றினார். பல்வேறு மூட பழக்கவழக்கங்களால் இருளில் வாழ்ந்த மக்களுக்கு இரட்சகர் இயேசுவை அறிவித்து, அவர்களை ஒளியின் பிள்ளைகளாக மாற்றினார். ஆஸ்திகளை அல்ல, கிறிஸ்துவை மட்டுமே சார்ந்து வாழ்ந்த ஸ்டட் தன் 70-வது வயதில் மிகவும் மகிழ்ச்சியுடன் இறைவனிடம் சென்றார். இவர் உலகளாவிய சுவிசேஷப்போரின் நிறுவனர் (WEC) ஆவார்.



## அன்பரின் ஊழிய கூட்டங்களுக்கு உதவி செய்து ஆத்தும ஆதாயப் பணியை மேற்கொண்ட பங்காளர்கள் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம் ஏராளம்!



**நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். சங்கீதம் 116:14**

என் பெயர் கிருஷ்ணவேணி. சிறு வயதிலிருந்தே அன்பரின் ஊழிய பத்திரிக்கையை படித்து வருகிறேன். **திருச்சி மதுரம் ஹாலில் நடைபெற்ற அனைத்து கூட்டங்களுக்கும் தவறாமல் வந்து கலந்துக்கொள்வேன். அதனால் கர்த்தரை அதிகமாக அறிந்துக்கொள்வதற்கும், கிறிஸ்தவ விசுவாசத்தில் வளருவதற்கும் உதவியாக இருந்தது.**

2020-ம் ஆண்டு நடந்து முடிந்த பஞ்சாயத்து தேர்தலில் முக்கியமான ஒரு நபரை எதிர்த்து என்னுடைய அப்பா போட்டியிட்டார். பொருளாதாரத்தில் ஆள் பலத்தில் எல்லாம் அவர்கள் முன்பாக நாங்கள் ஒன்றுமில்லாமல் காணப்பட்டோம். தேர்தலுக்கு முதல் நாள் டெலிவரன்ஸ் திருச்சபைக்கு வந்து, இந்த பஞ்சாயத்து தேர்தலில் என் அப்பா வெற்றியடைந்தால் ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு, நான் உதவி செய்வேன் என பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். **கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அந்த தேர்தலில் என் அப்பா 1200 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு ஆவியானவர் தாமே ஒத்தாசை செய்தார்.** இதற்கு முன் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் 100, 150 ஓட்டு வித்தியாசத்தில் தான் வெற்றியடைந்து இருந்தனர். என் அப்பாவுக்கு இந்த மாபெரும் வெற்றியை தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

எங்கள் உறவினர்களால் பயங்கரமாக ஏவப்பட்டிருந்த பில்லிசூன்யக் காரியங்களால், நானும் என் கணவரும் உயிருக்கே ஆபத்தான நிலை ஏற்படும் படியாக அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தோம். அந்த நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் சொந்த பிள்ளையைப்போல நேசித்து எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே எங்கள் இருவருடைய ஜீவனையும் அற்புதமாக பாதுகாத்தார். நாங்கள் இருவரும் கர்த்தரின் கிருபையால் நல்ல சுகத்துடன் இருக்கிறோம்.**

என் பொருத்தனையை நிறைவேற்றும் விதமாக 2024-ம் வருடம் மே மாதம் தோகைமலையில் அன்பரின் ஊழியத்தின் மூலம் ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு நான் உதவி செய்தேன்.



▶ கர்த்தரை அறியாத பிள்ளைகள் எங்கள் ஊரில் அநேகர் இருக்கிறார்கள். இந்த கூட்டத்தின் வாயிலாக அநேகர் கர்த்தரை அறிந்துக்கொண்டார்கள்.

▶ அநேகர் பிசாசின் கிரியைகளிலிருந்து விடுதலை யானார்கள். அநேகர் சுகம் பெற்றுக் கொண்டார்கள்.

▶ நான் கிறிஸ்துவை அறிந்துக்கொண்டது போல இந்த கூட்டத்தின் வாயிலாக ஏராளமானோர் கிறிஸ் துவை அறிந்துக்கொண்டது எனக்கு அதிக மகிழ்ச்சியை தருகிறது. என்னையும் ஆத்தும ஆதாயம் செய்யும் பணியில் பயன்படுத்திய கர்த்தரை துதிக்கிறேன்.

**- திருமதி. கிருஷ்ணவேணி, தோகைமலை.**

## பரிபூரண சுகமும், அற்புத விடுதலையும்!



என் பெயர் மணிமேகலை. என் தம்பி பெயர் பாஸ்கரன். நாங்கள் இருவரும் ஆசிரியர்களாக இருக்கிறோம். 2025-ம் வருடம் மார்ச் மாதம் பட்டுக்கோட்டையில் கூட்டம் நடத்துவதற்காக நானும் என் தம்பியும் இணைந்து உதவி செய்தோம். கர்த்தர் எங்கள் குடும்பங்களை ஆசீர்வாதமாக வைத்து இருக்கிறார். என்னுடைய இரண்டு மகள்களும் மருத்துவபடிப்பை முடிப்பதற்கு கர்த்தர் உதவி செய்தார்.

என் தங்கைக்கு அறுவைசிகிச்சை மூலம் குழந்தை பிறந்தது. அந்த நாளிலிருந்து அவளுடைய முதுகு தண்டுவடத்தில் பயங்கரமான வலி இருந்துக் கொண்டே இருந்தது. பல சிகிச்சைகள் எடுத்தும் வலி நீங்கவில்லை. பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்கு அவள் வந்திருந்தாள். ஜெப நேரத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தீர்க்கதரிசனமாக அவள் பெயரை சொல்லி அழைத்து அவளுக்கு இருந்த பிரச்சனையை சொல்லி ஜெபித்தார்கள். அந்த நேரமே முதுகுத் தண்டுவட வலி நீங்கியது. இன்று வரை வலி இல்லாமல் அவள் நல்ல சுகத்துடன் இருக்கிறாள்.**

என்னுடைய மகன் பெயர் அஜீத். அவன் கல்லூரி இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தான். அவனும் அந்த கூட்டத்தில் கலந்துக்கொண்டான். **ஒரு தற்கொலை ஆவி அவனை துன்புறுத்திக்கொண்டே இருந்தது. அவனுக்காகவும் ஐயா ஜெபித்தார்கள். அவனும் அந்த நாளில் அற்புதமாக விடுதலையாகி நல்ல சுகத்துடன் இருக்கிறான். எங்கள் குடும்பத்திற்கு கர்த்தர் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் நன்றி கூறுகிறேன்.**

இந்த கூட்டத்தின் வாயிலாக அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். கர்த்தருடைய இராஜ்யத்திற்காக பிரயாசப்படக்கூடிய நல்ல வாய்ப்பை எங்களுக்கு தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

என்னால் தனியாக ஊழியம் செய்ய முடியாத காரணத்தினால் அன்பரின் ஊழியத்துடன் இணைந்து இந்த கூட்டத்திற்கு உதவி செய்ததன் வாயிலாக ஆத்தும ஆதாயப் பணி செய்த மனநிறைவு எனக்கு உண்டானது.

**- திருமதி.மணிமேகலை, பட்டுக்கோட்டை.**









**▶ அன்பான பங்காளர்களே, சகோதரி. கிருஷ்ணவேணி மற்றும் சகோதரி மணிமேகலையை பயன்படுத்திய கர்த்தர் உங்களையும் கர்த்தருடைய பணியில் பயன்படுத்துவார்.**

**▶ இந்த ஆண்டு பல இடங்களில் நாம் கூட்டங்களை நடத்த வேண்டியிருக்கிறது.**

**▶ உங்கள் பகுதியில் கூட்டங்கள் நடைபெறும்பொழுது விளம்பர பலகைகள் வைப்பது, ஆடியோ சிஸ்டம், நாற்காலிகள், தங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் எங்களுடைய சாப்பாடு செலவுகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு எங்களுக்கு உதவி செய்யலாம்.**

**▶ உங்கள் பகுதிகளில் கூட்டங்களை நடத்துவதற்கான முழு பொறுப்பையும் நீங்கள் எடுத்துக்கொள்ள விரும்பினால் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.**

**▶ மாதந்தோறும் உங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி கூட்டங்களை நடத்துவதற்கு உதவி செய்யுங்கள்.கூட்டங்களை தாங்கக்கூடிய அனைத்து பங்காளர்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து இன்னும் ஆயிரம் மடங்காக பெருகச் செய்வாராக!**

# உலக செய்திகள்

## தேர்வு எழுத இருக்கும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

**மாணவர்கள் சிறப்பாக படிக்க, திட்டமிடுதல், கவனம் சிதறாமல் இருத்தல், நேர மேலாண்மை, சுயபரிசோதனை செய்து பலம் பலவீனங்களை அறிதல் மற்றும் தேர்வு எழுதும்போது முக்கியமான பகுதிகளை முன்னிலைப்படுத்துதல் போன்ற குறிப்புகளைப் பின்பற்றலாம். இந்த குறிப்புகள் உங்கள் படிப்புத் திறனை மேம்படுத்தவும், தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெறவும் உதவும்,**

### படிப்பிற்கான குறிப்புகள்

1.நேர மேலாண்மை (Time Management) : ஒரு அட்டவணை போட்டு, ஒவ்வொரு பாடத்திற்கும் நேரம் ஒதுக்கிப் படிக்கவும் சமூக வலைத்தளங்களுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது முக்கியம்.

2.கவனம் செலுத்துதல்: படிக்கும்போது கவனம் சிதறாமல் இருக்க, கவனச் சிதறல்களைத் தவிர்க்கவும். இதற்கு அறிவியல் ரீதியான வழிகளைப் பின்பற்றலாம்.

3.உங்கள் பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து, அதற்கேற்ப படிக்கவும். இது தேர்வில் வெற்றி பெற உதவும்.

4. தேர்வு எழுதும் நுட்பங்கள் : எப்படி முக்கியமான புள்ளிகளை அடிக்கோடிடுவது, (highlighting) விடைகளை சரியான வரிசையில் எழுதுவது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம்.

5.எழுதுவதை தெளிவாகவும், படிக்கக்கூடிய வகையிலும் எழுதுங்கள்.

6.கடினமான பாடப்பகுதியை எளிமைப்படுத்தி, குறிப்பெடுத்து வைப்பது தேர்வு நேரத்தில் உதவியாக இருக்கும்.

7.எந்தெந்த பாடங்களிலிருந்து நெடுவினாக்களை எழுதப்போகிறோம் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பாடத்திலுள்ள நெடுவினாக்களை எழுதிப் பார்ப்பது தேர்வில் வெற்றிபெற உதவியாக இருக்கும்.

8.வகுப்பறையில் ஆசிரியர் பாடத்தை விளக்கும்போது நன்கு கவனிக்க வேண்டும் தெளிவாகக் குறிப்பெடுத்துக்கொள்ள வேண்டும்.

9.ஆசிரியர் பாடப்பகுதியை எடுத்து முடித்ததும், பாடப்பகுதி முழுவதையும் தெளிவாக வாசித்து, புரியாத பகுதிகளுக்கு விளக்கம் கேட்க வேண்டும்.

10.கடினமான பாடப்பகுதிகளை அடையாளம்கண்டு, அதைப் பல பகுதிகளாகப் பிரித்து, எளிமையாக்கிப் படிக்க முயற்சி செய்ய வேண்டும்.

11.இடைவெளி இல்லாமல் படிப்பதை விடுத்து, சிறிது நேரம் ஓய்விற்காக ஒதுக்குங்கள். ஒரு பாடத்திற்கு ஒரு மணிநேரம் என்ற அளவில் கால அட்டவணை இடுங்கள்.

12.பிறகு படிக்கலாம் என்று தள்ளிப் போடாதீர்கள். கடினப் பகுதிகளை, பாடங்களை ஒதுக்காதீர்கள்.

13. தினமும் படியுங்கள், அதனால் பாடச்சுமை குறையும்.

14.ஓய்வு, மெல்லிசை, அமைதியாகச் சிந்தித்தல் போன்றவை மனதை ஒருமுகப்படுத்த உதவும்.











# புதுச்சேரியில் அற்புதத்தின் மாலை கூட்டம்

பிப்ரவரி
**07**
(சனிக்கிழமை)

St. Peter's English High School
(behind Dental College)
காமராஜ் நகர், கோரிமேடு, புதுச்சேரி - 6

தொடர்புக்கு : 9488845627, 0431-2741922
மேலும் விபரங்களுக்கு: Bro. Selvaraj : 9894462161

மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

பிப்ரவரி
**08**
(ஞாயிற்று கிழமை)

## ஆலய ஆராதனை

புதுச்சேரி விசுவாசிகள் சபை
எண்.6 சபைத்தெரு, மகாத்மா நகர், ECR, இலாஸ்பேட்டை,
(லதா ஸ்டீல்ஸ் பேருந்து நிறுத்தம்) புதுச்சேரி - 8

நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 12.30 மணி வரை

## சுகமளிக்கும் ஆராதனை

புதுச்சேரி விசுவாசிகள் சபை
எண்.6 சபைத்தெரு, மகாத்மா நகர்,
ECR, இலாஸ்பேட்டை,
(லதா ஸ்டீல்ஸ் பேருந்து நிறுத்தம்) புதுச்சேரி - 8



## தேவ செய்தி

Dr.ஆனந்த ஸ்திரா, Dr. ஜேன் ஜாஷ்வா

நேரம் : மாலை 6.00 மணி முதல்

தொடர்புக்கு : 9488845627, 0431-2741922
மேலும் விபரங்களுக்கு: Pr. Stephen : 9443090022